## February 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மிகுந்த எதிர்பார்ப்புக்கு இடையே 2026-27-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்தார். மத்திய நிதியமைச்சராக இவர் தொடர்ந்து 9- ஆவது முறையாக தாக்கல் செய்யும் பட்ஜெட் இதுவாகும்.

(i) முக்கிய அம்சங்கள் :-

- வருமான வரி விகிதங்கள் எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்கிறது.
- தணிக்கை அல்லாத வணிகத்துக்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் கால அவகாசம் ஆக.31 வரை நீட்டிப்பு.
- இந்தியாவில் தரவு மையங்களை அமைத்து, உலகளவிலான சேவைகளை வழங்கும் அந்நிய நிறுவனங்களுக்கு 2047-ஆம் ஆண்டு வரை வரி விலக்கு.
- பங்குச் சந்தை ஊக வணிகத்துக்கான (ஃபியூச்சர்ஸ் அண்ட் ஆப் ஷன்ஸ்) பங்கு பரிவர்த்தனை வரி (எஸ்டிடி) 150 சதவீதம் வரை அதிகரிப்பு.
- வெளிநாட்டு சுற்றுலா பயணத்துக்கான ஆதார வரி (டிசிஎஸ்) 2 சதவீதமாக குறைப்பு. தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிவர்த்தனை திட்டத் தின்கீழ் (எல்ஆர்எஸ்) வெளிநாட்டில் கல்வி மற்றும் மருத்துவ செலவுகள் மீதான டிசிஎஸ் 2 சதவீதமாக குறைப்பு.
- குறைந்த அளவிலான வரி செலுத்தும் மாணவர்கள், தொழில்நுட்ப பணியாளர்களுக்காக ஒரு முறை மட்டும் செலுத்தக்கூடிய 6 மாத கால வெளிநாட்டு சொத்துகளை தெரிவிக்கும் திட்டம் அறிமுகம்.
- 2026-27-ஆம் நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை மொத்த உள் நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.3 சதவீதமாக இருக்கும் என கணிப்பு. இது 2025-26-ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாக இருக்கும் என கணிக்கப் பட்டது.
- 2026-27-ஆம் நிதியாண்டில் நிகர வரி வருவாய் ரூ.28.7 லட்சம் கோடி யாகவும் மொத்த சந்தை கடன் ரூ.17.2 லட்சம் கோடியாகவும் இருக்கும் என கணிப்பு.
- நிலையான பொருளாதார வளர்ச்சி, மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வது மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய மூன்று கடமைகளின் அடிப்படையில் பட்ஜெட் உருவாக்கம்.
- 2047-க்குள் இந்திய சேவைகள் துறை பங்களிப்பை உலகளவில் 10 சத வீதமாக உயர்த்தும் நோக்கில் உயர்நிலைக் குழு அமைக்க முடிவு.
- குறைந்தபட்ச மாற்று வரியே இறுதி வரியாக முன்மொழிவு.
- 17 புற்றுநோய் மருந்துகளுக்கான அடிப்படை சுங்க வரிக்கு விலக்கு.
- ஏற்றுமதி, இறக்குமதிக்கு சுங்கத் துறை ஒப்புதல் பெற ஒற்றை சாளர மற்றும் ஒருங்கிணைந்த எண்ம தளம்.
- 2 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த சுங்க அமைப்பு (சிஐஎஸ்) அமல்.
- தனிப்பட்ட பயன்பாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்கள் மீதான வரி 20 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைப்பு.
- பயணிகள், பயிற்சி மற்றும் பிற பயன்பாட்டுக்கான விமானங்களை தயாரிப்பதற்கான உதிரி பாகங்களுக்கு விதிக்கப்படும் அடிப்படை சுங்க வரிக்கு விலக்கு.
- 7 அரிய வகை நோய்களுக்கான மருந்துகள் மற்றும் உணவு இறக்கும திக்கு வரி விலக்கு.
- 5 பர்வோதய மாநிலங்களில் 5 சுற்றுலாத் தலங்கள் உருவாக்க திட்டம்.
- ஆதிச்சநல்லூர் (தமிழ்நாடு), லோத்தல், தோலாவீரா, ராக்கிகர்ஹி, சாரணாத், ஹஸ்தினாபூர் மற்றும் லே உள்ளிட்ட 15 தொல்லியல் அகழாய்வு பகுதிகளை கலாசார மையங்களாக மேம்படுத்த முடிவு.
- இந்தியாவை உயிரி மருந்து உற்பத்தி மையமாக உருவாக்க ரூ.10,000 கோடியில் 'பயோஃபார்மா சக்தி' என்ற புதிய திட்டம் அறிவிப்பு.

(ii) குறு-சிறு-நடுத் தர (எம்எஸ்எம்இ) நிறுவனங்கள் துறையில் எதிர்கால வெற்றியாளர்களை (சாம்பியன்கள்) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு அந்தத் துறைக்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.10,000 கோடி (எஸ்எம்இ) வளர்ச்சி நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.

(iii) குறுந்தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் வகையில், கடந்த 2021- இல் தொடங்கப்பட்ட தற்சார்பு இந்தியா நிதியத்துக்கு மேலும் ரூ.2,000 கோடி ஒதுக்கப்படும் என நிதியமைச்சர் தெரிவித்தார்.

(iv) மேலும், குறு-சிறு-நடுத்தர நிறுவனங்களுக்கு பணப் புழக்க ஆதரவை அவர்களின் விலைப்பட்டியல் தள்ளுபடிக்கான (டிஆர்இடி எஸ்) திட்டத்தின் முழுத் திறனை யும் பயன்படுத்திக்கொள்ளும் திட்டங்களையும் நிர்மலா சீதாரா மன் அறிவித்தார்.

(v) இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் குறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் 'தொழில் நிறுவன நண்பர்கள்' என்ற நிபுணர்களை உருவாக்க ஐசிஏஐ, ஐசிஎஸ்ஐ, ஐசிஎம்ஏஐ ஆகிய தொழில் கல்வி நிறுவனங்களின் உதவியுடன் குறுகியகால படிப்புத் திட்டங்கள் மற்றும் செய்முறைத் திட்டங்கள் வடிவமைக்கப்படும். இதன் மூலம் உருவாக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்கள், குறு-சிறு நிறுவனங்களுக்கு குறைந்த கட்டணத்தில் அரசின் ஒழுங்குமுறை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவுவர் என்றார்.

(vi) வளர்ந்தபாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்டத்துக்கு (விபி-ஜி ராம் ஜி) மத்திய பட்ஜெட்டில் ரூ.95,692.31 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- ஆண்டுக்கு 125 நாள்கள் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் இத்திட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட்டு, நிலுவையில் உள்ள பணிகள் அனைத்தும் நிறைவடையும் வரை முந்தைய மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் செயல்பாட்டில் இருக்கும். எனவே, முந்தைய திட்டத்துக்கு ரூ.30,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2000-இல் அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் அமலாக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்துக்கு (100 நாள் திட்டம்) மாற்றாக கொண்டு வரப்பட்ட விபி-ஜி ராம் ஜி திட்ட மசோதா, கடந்த குளிர்கால கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு இடையே நிறைவேற்றப்பட் டது.
- புதியதிட்டத்தின்படி,வேலை உறுதியளிப்பு நாள்கள் 100-இல் இருந்து 125-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. திட்டச் செலவில் மத்திய மாநில அரசுகள் இடையே 60:40 என்ற புதிய நிதிப்பகிர்வு முறையையும் உள்ளடக்கிய இத்திட்டத்தின் அம்சங்கள், மக்களின் வேலைக்கான உரிமையைப் பறிப்பதாக குற்றஞ்சாட்டி, எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

(vii) பிற திட்டங்களுக்கு...:

அடுத்த நிதியாண்டுக்கு மத்திய ஊரக மேம்பாட்டுத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1.94 லட்சம் கோடி. கடந்த முறை ஒதுக்கப்பட்ட ரூ.1.86 லட்சம் கோடியைவிட இது சற்று அதிகம். பிரதமரின் கிராமப்புற சாலை கட்டமைப்புத் திட்டத்துக்கு ரூ.19,000 கோடி, தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்துக்கு ரூ.19,200 கோடி, பிர தமரின் வீட்டுவசதி திட்டத்துக்கு ரூ.54,916 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. செயற்கைக்கோள் ட்ராக்கர் திட்டம் ‘ஆலிவ் ரிட்லி' வகை கடல் ஆமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் உள்ளதாக வனத் துறைச் செயலர் சுப்ரியா சாகு தெரிவித்துள்ளார்.

(i) ஆண்டுதோறும் டிசம்பர் முதல் ஏப்ரல் வரை சென்னை தொடங்கி கன்னியாகுமரி வரை உள்ள தமிழக கடலோரப் பகுதிகளில் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமைகள் முட்டையிடுவது வழக்கம். இதில், கடல் ஆமைகளின் கடல் வழிப் பயணம், இடமாற்றங்கள் குறித்து ஆய்வு செய்ய இந்திய வனவிலங்கு நிறுவனத்துடன் இணைந்து கடல் ஆமைகளின் மீது 'செயற்கைக்கோள் ட்ராக்கர்' பொருத்தும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதற்காக ரூ.84 கோடி ஒதுக்கப் பட்டது.

(ii) இந்நிலையில், தற்போது வரை 8 கடல் ஆமைகளின் மீது இந்த ட்ராக்கர்கள் பொருத்தப்பட்டு அவற்றின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

3. இஸ்ரேல்- ஹமாஸ் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமான, எகிப்து-காஸா இடையிலான ராஃபா எல்லை சோதனை அடிப்படையில் திறக்கப்பட்டது.

(i) இஸ்ரேல் ராணுவத்தின் கண்காணிப்புடன், சர்வதேச நாடுகள் அனுப்பிய மனிதாபிமான உதவிப் பொருள்களை ஏற்றிவந்த லாரிகள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் காஸாவுக்குள் நுழைந்தன.

(ii) கடந்த 2024, மே மாதம் இஸ்ரேல் ராணுவம் இந்த எல்லையைக் கைப்பற்றிய பிறகு, சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து தற்போதுதான் முதல்முறையாக போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

4. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தேவிகா சிஹக் சாம்பியன் ஆனார். சூப்பர் 300 பிரிவு போட்டியில் அவருக்கு இது முதல் சாம்பியன் பட்டமாகும்.

(i) சூப்பர் 300 பிரிவு போட்டியில் சாம்பியனான 3-ஆவது இந்திய வீராங்கனையாக தேவிகா பெருமை பெற்றார். இதற்குமுன் பி.வி. சிந்து, சாய்னா நெவால் ஆகியோர் அதில் வாகை சூடியுள்ளனர்.

(ii) கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் மலேசியா இன்டர்நேஷனல் போட்டியின் மூலமாக தனது முதல் சர்வதேச கோப்பை வென்ற தேவிகா, அப்போது முதல் நிலையாக முன்னேறி வருகிறார்.

5. ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், செர்பிய நட்சத்திரம் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தி ஸ்பெயின் இளம் வீரர் கார்லோஸ் அல்கராஸ் முதல் முறையாக சாம்பியன் கோப்பை வென்றார்.

(i) ஏற்கெனவே, பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், யுஎஸ் ஓபன் ஆகியவற்றில் பட்டம் வென்றிருந்த அல்கராஸ், தற்போது அனைத்து கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் சாம்பியனாகி, கேரியர் கிராண்ட்ஸ்லாம் பெற்றவர் ஆகியிருக்கிறார். அதிலும், டென்னிஸ் வரலாற்றில் கேரியர் கிராண்ட்ஸ்லாம்' நிறைவு செய்த மிக இளம் வீரராக (22) அவர் சாதனையும் படைத்திருக்கிறார்.

(ii) 88 ஆண்டு சாதனை முறியடிப்பு...

- கேரியர் கிராண்ட்ஸ்லாம் வென்ற இளம் வீரராக வரலாறு படைத்த அல்கராஸ், 88 ஆண்டுகால சாதனையை முறியடித்திருக்கிறார். இதற்கு முன் 1938- இல் அமெரிக்காவின் டான் பட்ஜ் (22 வயது 363 நாள்கள்) பிரெஞ்சு ஓபனில் சாம்பியன் ஆனதன் மூலமாக கேரியர் கிராண்ட்ஸ் லாமை நிறைவு செய்ததே சாதனையாக இருந்த நிலையில், தற்போது அல்கராஸ் (22 வயது 272 நாள்கள்) அந்த சாதனையை முறியடித்திருக்கிறார்.
- ஒட்டு மொத்தமாக, கேரியர் கிராண்ட்ஸ்லாம் வென்றுள்ள 9-ஆவது வீரர் அல்கராஸ் ஆவார்.
- இதுவரை கேரியர் கிராண்ட்ஸ்லாம் :-

ஃபிரெட் பெரி (பிரிட்டன்) - 1935

டான் பட்ஜ் (அமெரிக்கா)- 1938

*ராட் லேவர் (ஆஸ்திரேலியா) - 1962

ராய் எமர்சன் (ஆஸ்திரேலியா)- 1964

ஆண்ட்ரே அகஸி (அமெரிக்கா) - 1999

ரோஜர் ஃபெடரர் (சுவிட்ஸர்லாந்து) - 2009 ரஃபேல் நடால் (ஸ்பெயின்)- 2010

நோவக் ஜோகோவிச் (செர்பியா) - 2016

கார்லோஸ் அல்கராஸ் (ஸ்பெயின்) - 2026

* இவர்களில் ராட் லேவர், ஓபன் எராவுக்கு (1968) முன்பாக அமெச்சூராகவும் (1962), அதற்கு பிறகு தொழில்முறை போட்டியாளராகவும் (1969) என இருமுறை கேரியர் கிராண்ட்ஸ்லாம் வென்றிருக்கிறார்.

6. வள்ளலார் மற்றும் சுதந்திர போராட்ட வீரர் மறைந்த ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் ஆகியோருக்கு குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஞாயிற்றுக்கிழமை மரியாதை செலுத்தினார்.

7. 2026-27- ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், 85 நிமிஷங்கள் உரையாற்றினார்.

(i) அவர் தொடர்ந்து 9-ஆவது முறையாக தாக்கல் செய்த பட்ஜெட் இதுவாகும். சுதந்திர இந்தியாவில் ஞாயிற்றுக்கிழமை பட்ஜெட் தாக்கலானது இதுவே முதல் முறையாகும்.

8. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் உள்நாட்டுப் பங்குச் சந்தைகளில் பங்கு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யலாம் என்று ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் பங்குச்சந்தையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(i) இந்திய பங்குச்சந்தைகளில் இருந்து வெளிநாட்டு நிறுவன முதலீடுகள் அதிகம் வெளியேறும் நிலையில் இந்த நடவடிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது தொடர்பாக பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது: இந்தியாவுக்கு வெளியே வசிக்கும் தனிநபர்கள் (பிஆர்ஓஐ) பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள இந்திய நிறுவனங்களில் நேரடியாக முதலீடு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கான பங்கு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் இது செயல்படுத்தப்படும்.

(ii) இது தவிர ஏற்கெனவே உள்ள திட்டத்தில் முதலீட்டுக்கான வரம்பு 5 சதவீதமாக இருந்தது. இது தற்போது 10 சதவீதமாக அதிகரிக்கப்படும். இந்தியாவில் பல்வேறு பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் மொத்த முதலீடு 10 சதவீதத்தில் இருந்து 24 சதவீதமாக உயர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது என்றார் அவர்.

(iii) இந்திய ரிசர்வ் வங்கியால் (ஆர்பிஐ) சிறப்பு அனுமதி வழங்கப்பட்ட வங்கிகளில் கணக்குத் தொடங்குவதன் மூலம் இந்த முதலீடுகளை மேற்கொள்ள முடியும். வெளிநாடுகளில் இருந்து முதலீடுகள் அதிகம் வருவது இந்திய ரூபாயின் மதிப்பை ஸ்திரமாக்க உதவும் என்று இத்துறை சார்ந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

9. வெளிநாடுகளில் இருந்து இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளி சுற்றுலாப் பயணிகள் தங்களுடன் வரியின்றி கொண்டுவர அனுமதிக்கப்படும் பொருள்களின் மதிப்பு ரூ.50,000- இல் இருந்து ரூ.75,000-ஆக உயர்த் தப்பட்டுள்ளது. மத்திய பட்ஜெட்டில் இது தொடர்பான அறிவிப்பை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்ட நிலையில், பயணியர் உடைமைகள் விதிமுறைகள்-2026 வெளியிடப்பட்டது.

(i) அதன்படி, வெளிநாடுகளில் இருந்து இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் தங்களுடன் வரியின்றி கொண்டுவர அனு மதிக்கப்படும் பொருள்களின் மதிப்பு உச்சவரம்பு ரூ.50,000- இல் இருந்து ரூ.75,000-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், வெளிநாட்டை பூர்விகமாக கொண்ட பயணிகள், இதுவரை ரூ.15,000 வரையிலான மதிப்புள்ள பொருள்களை வரியின்றி கொண்டுவர அனுமதிக்கப்பட்டனர். இப்போது இது ரூ.25,000-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ii) வெளிநாடுகளில் ஓராண்டுக்கும் மேலாக வசிக்கும் இந்தியர் அல்லது இந்திய வம்சாவளி நபர், அவர் பெண் என்றால் 40 கிராம் நகைகள் (தங்கம், வெள்ளி, பிளாட்டினம், மதிப்புமிக்க பிற உலோகங்கள்) வரையும், ஆண் என்றால் 20 கிராம் நகைகள் வரையும் வரியின்றி எடுத்துவர அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. பங்குச்சந்தையில் முன்பேர வர்த்தகம் என்று சொல்லப்படும் ஊக வணிகமான ஃபியூச் சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் (எஃப் அண்ட் ஓ) பிரிவில் பங்குப் பரிவர்த் தனை வரி (எஸ்டிடி) 50 முதல் 150 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதன் தாக்கம் பங்குச்சந்தையில் எதிரொலித்ததால், கடும் சரிவுக்கும் காரணமாக அமைந்தது. இது தொடர்பாக பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:

(i) எதிர்கால (ஃபியூச்சர்ஸ் பிரிவு) ஒப்பந்தங்களுக்கு பங்குப் பரிவர்த் தனை வரி 0.02 சதவீதத்தில் இருந்து 0.05 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போல ஆப்ஷன்ஸ் (பிரிமியம்) பிரிவில் பங்குப் பரிவர்த் தனை வரி 0.1 சதவீதத்தில் இருந்து 0.15 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆப்ஷன்ஸ் (எக்சர்சைஸ்) பிரிவில் பங்குப் பரிவர்த்தனை வரி 0.1 சதவீதத்தில் இருந்து 0.125 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. இதன் மூலம் பங்குச்சந்தையில்

ஊக வணிகப் பிரிவில் அதிகஅளவிலான ஊக நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும்.

11. மக்களவையில் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப் பட்ட 2026-27-ஆம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், தமிழகத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் மேம்பாடு முதல் பொதிகை மலை வரை பல பகுதிகளுக்கான திட்டங்கள் முக்கிய கவனம் பெற்றன.

(i) நிர்மலா சீதாராமன் தனது உரையில், மின் வாகனங்கள், புதுப்பிக்கத் தக்க ஆற்றல், மின்னணுவியல் மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்கு அரிய வகை கனிமங்கள் அத்தியாவசியமானவை. இவற்றுக்காக சீனாவை இந்தியா சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கும் நோக்கில், தமிழகம், கேரளம், ஒடிசா மற்றும் ஆந்திரத்தில் பிரத்யே அரிய வகை தாது வழித்த டங்கள் அமைக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

(ii) உலகத் தரம் வாய்ந்த மலையேற்ற அனுபவத்தை வழங்கும் நோக்குடன் ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் ஜம்மு - காஷ்மீர், கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அரக்கு பள்ளத்தாக்கு (ஆந்திர பிரதேசம்) மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகை மலை (தமிழ்நாடு - கேரளம்) ஆகிய இடங்களில் சூழலியல் ரீதியாக நிலையான மலைப் பாதைகள் உருவாக்கப்படும்.

(iii) இதேபோல ஒடிசா, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் கடலோர பகுதிகளில் உள்ள முக்கிய முட்டையிடும் தலங்களில் ஆமைகள் செல்லும் வழித்தடம் அமைக்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(iv) ஆந்திரம் மற்றும் தமிழக எல்லையில் உள்ள பழவேற்காடு ஏரி பகுதியில் பறவைகளைக் கண்காணிக்கும் பாதைகளை அமைப்பது குறித்த அறிவிப்பும் இடம்பெற்றுள்ளது.

(v) இத்துடன் 15 தொல்லியல் தலங்கள் மேம்படுத்தப்படும் பட்டியலில் தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் அகழாய்வுத் தலம் இடம்பெற்றுள்ளது.